செய்தி வெளியீடு எண்:489 நாள்:19.10.2016

செய்தி வெளியீடு

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர்களின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களின் தலைமையில் இன்று 19.10.2016 சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் மாநாட்டு கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் இதர பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில் **“எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லலாமை இல்லாத நிலை வேண்டும்”** என்ற நிலையை தமிழகம் பெற வேண்டும் என்று என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அயராது பாடுபட்டு என்னற்ற பல திட்டங்களை இத்துறைக்கு அறிவித்து வெற்றி கரமாக செயல்படுத்தி கொண்டு வருகிறார் என்றும், 2011–2012 முதல் 2015–16 வரை 60,000 பயனாளிகளுக்கு 60,000 கறவைப்பசுக்கள் தலா 1 பசு வீதம் ஒரு பயனாளிக்கும் மற்றும் 70,00,000 பயனாளிகளுக்கு 28,00,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் தலா 4 ஆடுகள் வீதம் ஒரு பயனாளிக்கு முறையே இலவச கறவைப் பசுக்கள் மற்றும் இலவச வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்கள் நடப்பு ஆண்டிலும் (2016–17) தொடர்ந்து செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2016–17 ம் ஆண்டில் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்ற 11வது சுற்று தடுப்பூசி பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அனைத்து கால்நடைகளுக்கும் விடுபாடின்றி 100% தடுப்பூசி பணி மேற்கொண்டதற்காக அலுவலர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2016–17ம் ஆண்டு ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இறவையில் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் சாகுபடி மற்றும் மானாவாரியல் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு தீவன சோளம் மற்றும் தீவன காராமணி விதைகள் வழங்கப்பட்டு வரும் முன்னேற்றத்தினை ஆய்வு மேற்கொண்டார்.

தற்போது நடைமுறையிலிருக்கும் கோழியின அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இதுவரை 244 கறிக்கோழிப் பண்ணைகளும் 11070 நாட்டுக் கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை மேலும் முனைப்புடன் செயல்படுத்துமாறு துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

கடந்த 5 ஆண்டுகளில் துறையின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு 1615 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.422.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1500 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 115 கட்டடப்பணிகளையும் விரைந்து முடிக்குமாறு பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், அரசின் சிறப்பு திட்டங்களை செயல்படுத்தும் அதே வேளையில், துறையின் முக்கிய பணிகளான கால்நடை உடல் நலன் பேணுதல், நோய்கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல், போன்ற பணிகளையும் சிறப்புடன் செயல்படுத்த அறிவுறுத்தினார். கடந்த ஆண்டுகளில் அனைத்து குறியீடுகளையும் எய்தியது போல நடப்பு ஆண்டிலும் அனைத்து குறியீடுகளையும் விடுபாடின்றி எய்தவும், தரமான சேவையை கால்நடை வளர்ப்போருக்கு வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப, அவர்கள் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், இயக்குநர் திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப, பொதுப்பணித்துறை இணை தலைமை பொறியாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**